# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 17 திங்கட்கிழமை 01.07.2024 கதிர் 287







# தேசியத்தலைவராலும் அங்கீகரிக்கப்பட்ட தலைவரை எங்கள் தேசம் இழந்திருக்கிறது அவர் விட்டுச்சென்ற பயணத்தில் ஒற்றுமையாக தமிழ்த்தேசியத்தை வென்றெடுப்போம்!

## சம்பந்தனுக்கான இரங்கலில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு






**சம்பந்தனின் இழப்பு தமிழ் மக்களைப்பொறுத்தவரை காலத்தின் பேரிழப்பாகும்! அவரின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் கருத்தில் கொண்டு அவர் விட்டுச்சென்ற பயணத்தில் நாங்கள் ஒற்றுமையாக ,ணைந்து தமிழ்த் தேசியத்தை வென்றெடுப்போம்!, என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.** 2



# சம்பந்தனின் மறைவுக்கு இந்தியப் பிரதமர் இரங்கல்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் ,ரா. சம்பந்தனின் மறைவுக்கு ,ந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அனுதாபம் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்காக நீண்ட காலம் குரல் கொடுத்த அவர் எப்போதும் நினைவுகளில் வாழ்வார் என்று இந்தியப் பிரதமரின் இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# இறுதிமூச்சு வரை தமிழ் மக்களின் நலனுக்காகவே இரா. சம்பந்தன் எம்.பி. சிந்தித்தார், செயற்பட்டார்

## தமிழக முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

இலங்கையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., ,றுதி மூச்சு வரை தமிழ் மக்களின் நலனுக்காகவே சிந்தித்தார், செயற்பட்டார் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இரா. சம்பந்தன் மறைவுக்குத் தமிழக முதலமைச்சர் வெளியிட்டுள்ள ,ரங்கல் செய்தியில்,

“இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் மரியாதையைப் பெற்ற அரும்பெரும் தலைவராகத் திகழ்ந்தவர் சம்பந்தன். இறுதிமூச்சு வரையிலும் தமிழ் மக்களின் நலனுக்காகவே அவர் சிந்தித்தார், செயற்பட்டார். நாடாளுமன்றவாதியாக அரைநூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் ,லங்கையின் அரசியலில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தி வந்தன. இலங்கைத் தமிழ் மக்களுக்கான அதிகாரப்



பகிர்வுக்காக மிக நீண்டகாலம் அறவழியில் சம்பந்தன் போராடி வந்தார்.

இந்தியாவோடும் தமிழ்நாட்டுடனும் மிகச் சிறந்த நட்புறவைச் சம்பந்தன் பேணி வந்தார். தலைவர் கலைஞரின் நண்பராகவும், ,லங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும் பல முறை அவரைச் சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து 2

# தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடம் ஏற்பட்டுள்ளது!

## இரா.சம்பந்தன் எம்.பி.யின் மறைவுக்கு வட மாகாண ஆளுநர் இரங்கல் செய்தி

இலங்கைத் தமிழரசுக்கட்சியின்தலைவர் இரா.சம்பந்தனின் மறைவுக்குவடமாகாணஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.



அவர் தனது இரங்கல் செய்தியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 14 ஆவது எதிர்க்கட்சித் தலைவரும், சிரேஷ்ட அரசியல்வாதியும், சட்டத்தரணியுமாகிய திருவாளர் இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுச் செய்தி அறிந்து கவலை அடைகின்றேன்.

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட தலைவராக காலம் சென்ற இரா. சம்பந்தன் காணப்படுகின்றார்.

இன ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் நாட்டு மக்களின் நன்மை கருதி அன்னார் செயற் பட்டார் என்றால் மிகையாகாது. இத்தகைய ஒரு பெரும்தலைவரின் இழப்பானது தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில்எவ்வித ஐயப்பாடும்இல்லை. அன்னாரின் மறைவானது இலங்கை வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்துகொண்டிருந்த குரல் 2

# கொள்கை வேறு, கோட்டை வேறாயினும் எம்மோடு சமகாலத்தில் பயணித்தவர்!

## சம்பந்தனின் மறைவு குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரங்கல்

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் வயதில் எமக்கு மூத்தவர். கொள்கை வேறு, கோட்டை வேறாக இருப்பினும் அரசியல் தளத்தில் எம்முடனும் சம காலத்தில் பயணித்தவர்.

முரண்பாடுகள் ,ருப்பினும் காணும் பொழுதுகளில் அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதுண்டு.

வயது மூப்பின் காரணமாக அவர் மரணித்து விட்ட செய்தி துயரைத் தந்துள்ளது. அவரது இழப்பில் துயருறும் சகலருக்கும் ஆறுதல் கூறுகின்றேன்.



அவருக்கு அஞ்சலியும் மரியாதையும், என ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின்செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள இரங்கல் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (01)

## இறுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பந்தன் ஆலோசித்துள்ளார்.

2015ஆம் ஆண்டில் சம்பந்தன் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, “எனது அருமை நண்பர் நாவலர் அமிர்தலிங்கத்துக்குப் பிறகு, தமிழர் ஒருவர் ,லங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஆகியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. இலங்கைத் தமிழர்கள் அனைவரும், தங்கள் வாழ்வில் விடிவுகாலம் ஏற்படாதா என்று நீண்ட நாட்களாக எதிர்நோக்கியிருக்கும் வேளையில், எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஒரு நம்பிக்கையைத் தருகின்றது” என்று முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2016ஆம் ஆண்டு 13ஆவது முறையாகத் தலைவர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சம்பந்தனும் “,துவொரு சாதாரண சாதனையல்ல. எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு சாதனையாகும். ,லங்கைத் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெறுவதற்கு உங்களுடைய ஆக்கப்பூர்வமான பங்களிப்பு தொடர வேண்டும்” என்று வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

ஈழத்தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு ,லங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்க தலைவராக விளங்கிய சம்பந்தனின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடுசெய்ய முடியாதது. அவரது மறைவு ,லங்கைத் தமிழ் மக்கள் மட்டுமின்றி, உலகெங்கிலும் வாழும் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தனை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும் இலங்கைத் தமிழ் உறவுகளுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றேன்” - என்று குறிப்பிட்டுள்ளார். (05)

## தேசியத் தலைவராலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுக் காலமான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் ,ரா.சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் கட்சியின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சல நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த்தேசிய ,னத்தின் மிகப்பெரும் தலைவராக நீண்ட காலம் வழிநடாத்திய பெருந்தலைவரை இழந்துள்ளோம். அவர் மூப்பின் காரணமாக ,றந்திருந்தாலும் தமிழர்களின் விடுதலைப்பயணத்தில் 1960 இற்குப் பின்பு சிறந்த பணிகளை ஆற்றிய சட்டத்தரணியும் எதிர்கட்சி தலைவரும் எமது கட்சியின் தலைவருமான சம்பந்தன் ஐயாவின் இழப்பு தமிழ் மக்களைப்பொறுத்த வரை காலத்தின் பேரிழப்பாகும்.

அவருக்கான அஞ்சலி நாளிலே அவருடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் கருத்தில் கொண்டு, அவர் விட்டுச்செல்லும் பயணத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்றாக இணைந்து எங்கள் தமிழ் மக்களுக்கான தேசிய அபிலாசைகளையும் தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான நீண்ட பயணத்தில்எங்களுடைய கரங்களை ஒன்றாக இணைத்து பயணிப்பதே நாங்கள் அவருக்கு செய்யும் பணியாகும்.

அதிலும் குறிப்பாக தென் தமிழீழத்தில் உதித்த ஒரு மனிதனாக வடக்கையும் கிழக்கையும் இணைத்து, வடகிழக்கு மக்களுடைய இணைப்புக்கு மூலகாரணமாக இருந்து பெரும் பங்காற்றியவர். தேசியத்தலைவராலும் அங்கீகரிக்கப்பட்ட தலைவரை எங்கள் தேசம் இழந்திருக்கிறது - என்று தெரிவித்தார். (02,04)

## தமிழ்மக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று மௌனித்துள்ளது. காலம் சென்ற திருவாளர் இராஜவரோதயம் சம்பந்தனின்

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் பிரிவால் மீளாத் துயரில் வாடும் அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (01)

# லங்கா பிரீமியர் லீக் தொடர் இன்று கண்டியில் ஆரம்பம்!

*2024 ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் (எல்பிஎல்) கிரிக்கெட் தொடர் இன்று கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆர்மபமாகவுள்ளது.*

*இன்று தொடங்கும் ஐந்தாவது எல்பிஎல் தொடரை இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி சாமரி அத்தப்பத்து ஆரம்பித்து வைக்கவுள்ளார்.*

*அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் க்ளார்க் இந்த வருடத்துக்கான தொடரின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்றைய நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார். நேர்முக வர்ணனைகளிலும் அவர் இணைவார் என ஸ்ரீலங்கா கிரிக்கட் அறிவித்துள்ளது.*

*இன்றைய முதற் போட்டி பி லவ் கண்டி மற்றும்தம்புள்ள சிக்சர்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.*

*நாணயச் சுழற்சி 7 மணிக்கு நடைபெற்று போட்டி 7.30 இற்கு ஆரம்பமாகவுள்ளது. லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் ஆரம்ப நிகழ்வு மாலை 6.15 இற்கு போட்டி நடைபெறும்கண்டி பல்லேகல மைதானத்தில் இடம்பெறும். (04)*

# அரை நூற்றாண்டாகத் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தியவர்

### தமிழரசின் திருமலைக் கிளைத் தலைவர் இரங்கல்

(ஹஸ்பர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் கடந்த அரை நூற்றாண்டாகத் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநித்துவப்படுத்தி நின்றவரும் இலங்கைத் தமிழர் இனச் சிக்கலுக்கு தீர்வுக்கான அயராது உழைத்து வந்தவருமான மாண்புமிகு இரா.சம்பந்தன் ஐயா இயற்கை எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

ஐயாவின் பிரிவால் வாடும் அவரது மனைவி, மக்கள், மருமகள், பேரன் உள்ளிட்ட உற்றார் உறவினர் அனைவருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் சார்பில் இரங்கலையும் துயர் பகிர்வினையும் தெரிவித்துக் கொள்கின்றோம், என மாவட்ட கிளைத் தலைவர் சண்முகம் குகதாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு ரயில் மீது கல் வீசித் தாக்குதல்!

*கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (30) மாலை 6.40 மணியளவில் ரம்புக்கவ நோக்கி புறப்பட்ட ரயில் மீது தெமட்டகொட பிரதேசத்தில் வைத்து கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ரயிலின்ஜன்னவும்கதவும்சேதமடைந்துள்ளன.*

*இந்த ரயில் அதிக பயணிகளுடன் பயணித்துக்கொண்டிருந்தபோதும் அந்தத் தாக்குதலில் பயணிகளுக்கு எந்தப் பாரிய பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், பெரிய கல் ஒன்று கண்ணாடியை உடைத்துக்கொண்டு பயணி ஒருவரின் கால்களுக்கு முன்னால் வீழ்ந்ததாகவும், மேலும் சில பயணிகள் மீது கண்ணாடித் துண்டுகள் தெறித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.*

*அந்தத்தாக்குதலையும்மீறிரயில்தொடர்ந்து பயணித்துள்ளது. (04)*

# கல்கிஸ்ஸ கடலில் நீராடச் சென்ற 17 வயது மாணவனைக் காணோம்!

*கல்கிஸ்ஸ கடலில் நீராடச் சென்றவர்களில் மூவர் நீரோட்டத்தில் சிக்கி நீரில் மூழ்கியுள்ளனர். அவ்வாறு நீரில் மூழ்கியவர்களில் ஒரு மாணவன் காணாமல் போயுள்ளார்.*

*இச்சம்பவமானது நேற்று (30) மாலை இடம்பெற்றுள்ளது.*

*அபேசேகர மாவத்தை, பகுதியில் வசிக்கும் 17 வயதுடைய மாணவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.*

*காணாமல் போன மாணவனைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (04)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலய "கல்வி சிறக்கும் வழி திறக்கும் விழா"





(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு.கமு.சபீனா முஸ்லிம் வித்தியாலய "கல்வி சிறக்கும் வழி திறக்கும் விழா" பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி தலைமையில் இன்று பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம்.சி. பைசால் காசிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட புதிய அதிபர் காரியாலயம் மற்றும் பாதை என்பவற்றை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹிதுல் நஜீம் கௌரவ அதிதியாக கலந்து கொண்டதுடன் மேலும் நிர்வாக பிரதி கல்வி பணிப்பாளர் எம். எச். ஜாபீர், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஏ. சஞ்சீவன், வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி சட்டத்தரணி எம்.சி. ஆதம்பாவா, மாளிகைக்காடு ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.பௌசர், செயலாளர் நூருல் ஹுதா உமர், சாய்ந்தமருது மற்றும் காரைதீவு கல்விக்கோட்ட அதிபர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள் உட்பட பாடசாலை பிரதியதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம்.சி. பைசால் காசிம் அவர்களின் கல்விச் சேவையை பாராட்டி பாடசாலை சமூகம் பொன்னாடை போத்தி கௌரவித்ததுடன் கல்வியில் சாதித்த மாணவர்களுக்கும் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர்







# யாழில் உறவுகள் போராட்டம்

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இன்று காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# 75வது அகவையில் தடம்பதிக்கும் திருகோணமலை சல்லி அம்பாள் மகா வித்தியாலய நடைபவனி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை சல்லி அம்பாள் மகா வித்தியாலயத்தின் முன்னிட்டு 75 வது ஆண்டை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நடைபவனி கல்லூரி முன்றலிலிருந்து ஆரம்பமாகி இடம்பெற்றது.





கல்லூரியின் கடமை நிறைவேற்று அதிபர் திருமதி தர்மினி ரகுராம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக திருகோணமலை வலயக்கல்வி அலுவலக முறைசாரா கல்விப்பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளர் க.அகிலனும், கோட்டக்கல்வி அதிகாரி செ.சண்முகநாயகம் கௌரவ அதிதியாகவும், சிறப்பு அதியாக பாடசாலையின் முன்னாள் அதிபர் இ.கருணாகரனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நடை பவனியில் சகோதர பாடசாலையான திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய வாயிலில் வைத்து பாடசாலை சமூகத்தினரால் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கல்வயலில் வேதவனமும் பஞ்சாமியும் சங்கீதபூசணமும்





**இசைப்பேரறிஞர் கலாநிதி எம். பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் கலாநிதிப் பட்டமும் அகில இலங்கை கம்பன் கழகத்தால் இசைப்பேரறிஞர் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்ட பெருமைக்குரியவர் அவர். அவரது நூற்றாண்டையொட்டி நாதஸ்வர இரசிகர் ஒருவரின் பார்வையாக இவ்வாக்கம் பிரசுரமாகின்றது.**

**நடராசா சர்வேஸ்வரன்**
அதிபர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி

'நாளைக்கு வேதவன பிள்ளையார் கோவிலுக்கு பஞ்சாமி கோஸ்டியாம்' கல்வயலில் பரபரப்பு தொற்றிக்கொள்ளும்வேதவனப்பிள்ளைருக்கு அன்று சனம் களைகட்டும் பிள்ளையாரை தரிசிப்பது இரண்டாம்பட்சம் பஞ்சாமிகேசனின் நாதஸ்வரத்தை இரசிப்பதற்கே முதலிடம். அந்தக்காலம் கல்வயலில் சங்கீத அடையாளமா திகழ்ந்தவர் இசையரசு சங்கீதபூசணம் விநாசித்தம்பி அவர்கள். இவர் அண்ணாமலை யுனிவேசிட்டியில் கற்றவரும் இசைவல்லுனரும் சமயபிரசங்கியுமாக விளங்கியவர். ஆயினும் கல்வயல் வாசிகள் பலர் இசையை அறிந்தவர்களாக புராணிகர்களாக இசை இரசிகர்களாக விளங்கினர். இவர்கள் எல்லோரும் பஞ்சாபிகேசன் குழுவினர் பங்குகொள்ளும் மார்கழிமாத திருவிழாவில் வேதவனப் பிள்ளையார் கோவிலில் ஒன்றுகூடுவர். கல்வயலின் திருவையாறு மார்கழி சங்கீத உச்சவம் இதுவென்று கூறினால் அதுமிகை யாகாது.

அந்த காலம் கார் - பாவனை குறைவான காலம் புழுதியைக் கிளப்பியபடி கார் வந்ததும் 'மேளக்கோஸ்ரி வந்திட்டுது' என்று பேசிக்கொள்வர். அவ்வளவும் சோம்பேறித்தனமாக இருந்த கோவில் வளாகத்தில் ஒருவிதமான பரபரப்பு பற்றிக்கொள்கும். சிறுவர் கூட்டம் காரை சுற்றிக்கொள்ளும் பெயருக்கேற்ப அழகான நீண்ட முடியை குடுமியாக முடிந்தபடி மீசை தாடி இண்றி சவரம் செய்யப்பட்ட முகத்துடன் மெலிந்த உயர்ந்த வசீகரிக்கும் தோற்றத்துடன் கம்பீரமாக காரில் இருந்து பஞ்சாபிகேசன் இறங்குவார். இது என்னுடைய பத்து பதினைந்து வயது காலப்பகுதியின் பசுமையான ஞாபகம்.

திருவிழாவின் போது பஞ்சாமிகேசனுக்கு சற்று முன்பாக அவருக்கு எதிரான சங்கீதபூசணம் நகர்ந்த செல்ல ஏனைய இரசிகர்கள் இவர்களை சுற்றி வீதியில் நகர்ந்து செல்லும் காட்சி மறக்க கூடியதன்று. சொந்த ஊர் இரசிகர்களின் ஆர்வதூண்டலோ வேதவனத்தான் அருளோ எதுவோ திருவிழாவில் பஞ்சாபிகேசனின் வாசிப்பும் அருமையான விருந்தாக இருக்கும். குனிந்து கண்களை மூடி தலையை அசைத்து ஒரு கையால் விரல் மடக்கி எண்ணி வீசி தாளம் போட்டபடி சங்கீதபூசணம் இரசிப்பார்.


அருமையான வாசிப்பின்போது தன்னை மறந்து 'பிரமாதம்' 'பேஷ் பேஷ்' 'ஆஹா' என்று வாய்விட்டு கூவுவார். ஒரு புன்முறுவலுடன் கூடிய தலையசைப்பில் பஞ்சாபிகேசன் ஏற்றுக்கொள்வார். என்ன நடக்கிறது என்று விளங்காமல் இந்த கூத்தை எங்களைப் போன்ற சிறிய சங்கீதபூஞ்சணங்கள் இரசிப்போம்.

பஞ்சாபிகேசன் என்ற இசையாழுளுமையின் வீச்சு எத்தகையது என்பதற்கான சிறிய மாதரியாக கல்வயல் வேதவனத்தின் அனுபவங்களைக் கொள்ளலாம் என நம்புகின்றேன். தனது 85 ஆவது வயது வரை ஏறத்தாழ 70 வருடங்கள் நாதஸ்வரக் கலைஞராக எங்கள் மண்ணில் வாழ்ந்தவர். அவரது கலைச்சேவைகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் தென்மராட்சி இசை ஆர்வலர்கள் நூற்றாண்டு விழாவை முன்னெடுக்கும் செயற்பாடு முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கதாகும்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி மற்றும் துறைத்தலைவர்கள் கடமையேற்பு!

(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றிய கலாநிதி எஸ். சபீனா எம்.ஜி.எச். அவர்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த பீடாதிபதி வெற்றிடத்துக்காக கடந்த கடந்த மாதம் 28 ஆம் திகதியன்று இடம்பெற்ற தெரிவுப் போட்டியில் பீடத்தின் உயர் சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.



முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதியாக பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா மற்றும் முகாமைத்துவ துறையின் துறைத்தலைவராக பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.சி. சல்பியா உம்மா, நிதி மற்றும் கணக்கியல் துறையின் துறைத்தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.சி.என்.ஷபானா ஆகியோர் தங்கள் கடமைகளை உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ்அபூபக்கர் முன்னிலையில்ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு இன்று முகாமைத்துவ வர்த்தக பீடத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றில் முன்னாள் மாணவர்களில் ஒருவர், பீடம் ஒன்றின் பீடாதிபதியாக தெரிவு செய்யப்படுவது இது நான்காவது சந்தர்ப்பமாகும். முதலாவதாக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரும் இரண்டாவதாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் மூன்றாவதாக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீட பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ. முனாஸ் ஆகியோர் தெரிவாகி இருந்தனர். அதேவேளை இன்று துறைத்தலைவர்களாக கடமைகளை பெறுப்பேற்ற இருவரும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு கருத்துத் தெரிவித்த புதிய பீடாதிபதி பேராசிரியர் முஸ்தபா, தான் Infrastructure and Faculty Development, Student Engagement and Academic Enrichment, Faculty Support and Institutional Development என்ற மூன்று அம்சங்கள் கொண்ட அபிவிருத்தி திட்டங்களை மூன்று வருடத்தில் எட்டும் நோக்கில் குறித்த பணியை கையில் எடுத்துள்ளதாகவும் இதற்கு சம்மந்தப்பட்டவர்களின் ஆதரவு அவசியம் என்றும் தெரிவித்தார்.

இன்றைய கடமையேற்பின் மூலம் அடுத்த மூன்று வருட காலப்பகுதிக்கு முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதியாக பேராசிரியர் முஸ்தபாவும் பதவியேற்ற துறைத்தலைவர்களும் பணியாற்ற இருப்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய நிகழ்வில் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதிகளாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் , இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ. முனாஸ், பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.எல். அப்துல் ஹலிம், நூலகர் எம். எம். றிபாவுடீன், பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் உள்ளிட்டவர்களுடன் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பேராசிரியர்கள் துறைத்தலைவர்கள் விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்

## வலய மட்ட கரம் போட்டிகளில் அல்–அஷ்ரக் மாணவர்கள் சிறப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் அல்–அஷ்ரக் தேசிய பாடசாலையின் 20 வயதுப்பிரிவு பெண்கள் கரம் அணியினர் கல்முனை வலய மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை வலயமட்டத்தில் 17, 20 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியருக்கான கரம் போட்டிகள் மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.

கல்லூரி வரலாற்றில் முதல் தடவையாக பங்குபற்றிய அல்–அஷ்ரக் தேசிய பாடசாலையின் 20 வயதுப்பிரிவு பெண்கள் கரம் அணி தங்கப்பதக்கம் பெற்று சம்பியனாகவும், 17 மற்றும் 20 வயதுப்பிரிவு ஆண்கள் கரம் அணியினர் வெள்ளிப்பதக்கங்ளும் வென்று 3 அணிகள் மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.



## சமூக ஊடக ஆர்வலர்களுக்கான ஐந்தாவது பட்டறையும் நிறைவு!



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கியதாக 30 சமூக ஊடக ஆர்வலர்களைக் கொண்டு ஒரு வருட கால திட்டமாக கப்சோ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் "Youth Media Project" வேலைத்திட்டமானது கப்சோ நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிகழ்ச்சிட்டத்தின் ஐந்தாவது கட்ட நிகழ்வு கல்முனையில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்று (30) நடைபெற்றது.

நிகழ்வுகளுக்கு வளவாளராக 29 ஆம், 30 ஆம் திகதிகளில் சட்டத்தரணியும் ஊடக பயிற்றுவிப்பாளருமான பெனிஸ்லஸ் துஷான் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட சமூக ஊடக ஆர்வலர்களுக்கு "கலை மற்றும் ஊடகங்கள் மூலம் படைப்பு வெளிப்பாடு" சம்மந்தமான விரிவுரையினை வழங்கி இருந்தார்.

GCERF>HELVETAS epjpAjtpAld; GAFSO நிறுவனத்தின் அமுல்படுத்தலில் செயற்படுத்தப்படும் HOPE OF YOUTH வேலைத்திட்டத்தின் கீழ் இந்தத் திட்டமானது நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிளாஸ்டிக் இல்லாத நாட்டை உருவாக்கும் செயல் திட்டத்தில் கிளிநொச்சி பொலிஸார்

பிளாஸ்டிக் இல்லாத நாட்டை உருவாக்கும் தொனிப்பொருளில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் கிளிநொச்சி பொலிஸார், பொருத்தமான இடங்களை இனம் கண்டு பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் கூடைகளை வைத்து வருகின்றார்கள்.

பிளாஸ்டிக் இல்லாத நாட்டை உருவாக்கும் தொனிப்பொருளிலான செயற்பாட்டுக்கு, குமரபுரம் 6 ஆம் வீதி கலைச்செல்வி மோகனபவன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி பொலிஸாருக்கு பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் கூடைகளை வழங்கியுள்ளனர். அவற்றினை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையிடம் கையளிக்கும் நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி, கரைச்சி பிரதேச சபையின் பொறுப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் என பலர் கலந்து கொண்டனர். (02)






# வரிசையில் காத்திருந்த யுகத்தை நிறுத்தியதற்காக நாட்டின் தலைவர்களை நியமித்து விட முடியாது'

## மொட்டு சார்பில் ஒருவர் போட்டியிடுவார் என்கிறார் குட்டியாராச்சி எம்.பி.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் வேட்பாளர் ஒருவர் நிச்சயமாக முன்வைக்கப்படுவார் என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அகலவத்தை தொகுதி மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் நாட்டில் அன்று நிலவிய பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவே ரணில் விக்ரமசிங்கவை ஆட்சிக்கு கொண்டு வந்ததாக குறிப்பிட்டார்.

"வரிசையில் காத்திருக்கும் யுகத்தை நிறுத்தியதற்காக, ஷரூபாய் 2.50 க்கு உணவு கொடுத்ததற்காக, பால்மா பெக்கெட்டின் விலையை குறைத்ததற்காக எனக் கூறி தலைவர்களை நியமிக்க முடியாது. நாமலை அழைத்து வர முயற்சிக்கும்போது, அவர் இன்னும் பிஞ்சுக் காயாக உள்ளார் இன்னும் அவர் முற்றிவிடவில்லை என்கிறார்கள். இவர் எதில் பிஞ்சாக உள்ளார் என்று எனக்குத் தெரியவில்லை. அநுரகுமாரவிடம் பொருளாதாரக் கொள்கை இல்லை எனவும் குட்டியாராச்சி மேலும் தெரிவித்தார். (ரெஜ-01)



# நிறுத்திய திட்டங்களை மீளவும் ஆரம்பிப்பதற்கு காத்திருக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை

## உடனடியாக ஆரம்பிக்க ஜப்பானிய பதில் தூதுவர் வலியுறுத்தல்



ஜப்பானிய கடன் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு நாட்டின் கடன் மறுசீரமைப்பு முடிவடையும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனவும், இலங்கை மற்றும் இருதரப்பு கடன் வழங்குனர்களால் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் உடனடியாக திட்டங்களை ஆரம்பிக்க முடியும் எனவும் இலங்கைக்கான ஜப்பானிய பதில் தூதுவர் கட்ஸ/க்கி கொதாரொ தெரிவித்தார். அதன்படி, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டவுடன், விமான நிலைய விஸ்தீரணம் மேலும் அதிகரிக்கும் எனவும், அது இலங்கையின் சுற்றுலா வர்த்தகத்திற்கு உதவுவது மட்டுமல்லாமல் விநியோக செயற்பாடுகளுக்கும் உதவும் எனவும் கொதாரொ குறிப்பிட்டார்.

கொழும்பு சினமன் கிரேன்ட் ஹோட்டலில் இடம்பெற்ற மாநாட்டிலேயே இலங்கைக்கான ஜப்பானிய பதில் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில், இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஜப்பானிய வர்த்தகர்கள் காட்டும் ஆர்வம் அதிகரித்து வருவதாகவும், கடந்த வாரத்திலும் கூட பல ஜப்பானிய வர்த்தகர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தனர் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவித் திட்டம் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகியவற்றின் வெற்றிகரமான முன்னேற்றம் இலங்கையில் ஜப்பானிய வர்த்தகர்களின் ஆர்வத்தை அதிகரிக்க வழிவகுத்துள்ளதாகவும், இலங்கை நல்ல திசையில் செல்வதை அவர்கள் உணர்வதாகவும் கொதாரொ மேலும் தெரிவித்தார். (ரெஜ-02)

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதுகாக்கக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம்



திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கக் கோரி இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

திருகோணமலை நகர சபைக்கு அண்மையில் உள்ள திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபைக்கு முன்னால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபையினர், தொண்டர்கள் மற்றும் சைவ அடியார்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்தனர்.

திருக்கோணேஸ்வரம் ஆலய அண்மித்த கடைத் தொகுதியில் கசிப்பு விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதாகியதையடுத்து அதனை சீல் வைக்கச் சென்ற திருகோணமலை நகர சபை ஊழியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனைக் கண்டித்தும், திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க அரச துறை அதிகாரிகள் முன்வர வேண்டும் எனக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநருக்கு இது தொடர்பான மகஜர் ஒன்றும் அனுப்பப்பட்டது. (05)






## யாழ் மாநகர சபையிடம் வேலன் சுவாமிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் முருகப்பெருமான் வலம் வருகின்ற வெளிவீதிச் சூழலில் புனிதத்தையும், பக்தர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு யாழ் மாநகர சபையிடம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வேலன் சுவாமிகள் மேலும் தெரிவிக்கையில், காலங்காலமாக நல்லூர் ஆலய மகோற்சவ காலத்தில் யாழ் மாநகர சபையானது தனது பணிகளை செவ்வனே சிறப்பாக நிறைவேற்றி வந்திருக்கிறது. ஆனால் இவ்வருடம் சிலரின் அழுத்தங்கள் காரணமாக, காலங்காலமாக பேணப்பட்டு வந்த நடைமுறைகளை யாழ் மாநகரசபையானது மாற்ற முயற்சிப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

தன் முன் அனைவரும் சமம் என்ற நல்லூர் கந்தப் பெருமானுடைய தனித்துவத்தை பாதிக்கும் வகையில், ஒருசிலரை முருகப்பெருமான் வலம் வரும் வீதியில் பாதணிகளுடன் அனுமதிப்பது பல்லாயிரக்கணக்கான முருக அடியார்களின் மனதைப் புண்படுத்தும் செயலாகும். அத்துடன் அங்கப்பிரதிஸ்டை செய்கின்ற அடியவர்களுக்கு சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும்.

அத்துடன் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் நடமாடுகின்ற வெளிவீதியில் அத்தியாவசியமான வாகனங்களை தவிர ஏனைய வாகனங்களை அனுமதிப்பது அடியவர்களின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதோடு பக்தர்களிடையே பாகுபாட்டையும் ஏற்படுத்தும்.

ஆகவே காலங்காலமாக பேணப்பட்டு வந்த அதே நடைமுறைகளை இவ்வருட நல்லூர் மகோற்சவ காலத்திலும் நடைமுறைப்படுத்துமாறு யாழ் மாநகரசபையை வேண்டிக் கொள்கிறேன் - என்றார்.

(01)

## 25 இந்திய மீனவர்கள் கைது

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் 25 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நான்கு படகுகளையும், அதிலிருந்த 25 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கைதானவர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2024இல் வெளியிடப்பெற்றது.